# யூன் – 30 – பொதுக்கால 13ம் ஞாயிறு

**இறைவா! என்னைக் காத்தருளும்: உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன். திபா. 16:1**

---

## முதல் வாசகம் : 1அரசர் 19:16, 19 - 21

அந்நாள்களில் ஆண்டவர் எலியாவை நோக்கி, "ஆபேல் மெகோலாவைச் சார்ந்த சாபாற்றின் மகன் எலிசாவை உனக்குப் பதிலாக இறைவாக்கினராக அருள்பொழிவு செய்" என்றார்.எலியா அங்கிருந்து சென்று, சாபாற்றின் மகன் எலிசாவைக் கண்டார். அப்பொழுது அவர் ஏர்பூட்டி உழுதுகொண்டிருந்தார். அவருக்கு முன்னே பதினோர் ஏர்கள் இருந்தன. பன்னிரண்டாம் ஏரைத் தாமே ஓட்டிக்கொண்டிருந்தார். எலியா அவரிடம் சென்று, தம்மேலாடையை அவர் மீது தூக்கிப்போட்டார்.எலிசா அவரைக் கடந்து செல்கையில் ஏர் மாடுகளை விட்டுவிட்டு எலியாவிடம் ஓடிவந்து, "நான் என் தாய் தந்தையிடம் விடைபெற்று வர அனுமதிதாரும். அதன்பின் உம்மைப் பின்செல்வேன்" என்றார். அதற்கு அவர், "சென்றுவா, உனக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டேன்!" என்றார். எலிசா எலியாவை விட்டுத் திரும்பிவந்து, ஏர் மாடுகளைப் பிடித்து, அடித்துத் தாம் உழுத கலப்பைக்கு நெருப்பு மூட்டி, அம்மாட்டு இறைச்சியைச் சமைத்து, மக்களுக்குப் பரிமாற அவர்களும் அதை உண்டனர். பின்பு அவர் புறப்பட்டுப் போய் எலியாவைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்யலானார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து

## இரண்டாம் வாசகம் : கலாத்தியர் 5 : 1, 13 - 18

சகோதரர் சகோதரிகளே! கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார் அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை என்னும் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.அன்பர்களே, நீங்கள் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். அந்த உரிமை வாழ்வு ஊனியல்பின் செயல்களுக்கு வாய்ப்பாய் இராதபடி பார்த்துக் கொள்ளுங்கள். ஒருவருக்கு ஒருவர் அன்பின் அடிமைகளாய் இருங்கள். "உன்மீது நீ அன்புகூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக"என்னும் இந்த ஒரே கட்டளையில் திருச்சட்டம் முழுவதும் நிறைவு பெறுகிறது. ஆனால் நீங்கள் ஒருவரை ஒருவர் கடித்து விழுங்குவதை நிறுத்தாவிட்டால் ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவீர்கள். எச்சரிக்கை! எனவே நான் சொல்கிறேன் தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப வாழுங்கள். அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்றமாட்டீர்கள். ஊனியல்பின் இச்சை தூய ஆவிக்கு முரணானது. தூய ஆவியின் விருப்பம் ஊனியல்புக்கு முரணானது.இவை ஒன்றுக்கொன்று எதிராய் உள்ளதால் நீங்கள் செய்யவிரும்பவதை உங்களால் செய்யமுடிவதில்லை. நீங்கள் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டால் திருச்சட்டத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கமாட்டீர்கள்.

## நற்செய்தி : லூக்கா 9 :51 – 62

இயேசு விண்ணேற்றம் அடையும் நாள் நெருங்கி வரவே எருசலேமை நோக்கிச் செல்லத் தீர்மானித்து,தமக்கு முன் தூதர்களை அனுப்பினார். அவருக்கு இடம் ஏற்பாடு செய்வதற்காக அவர்கள் சமாரியருடைய ஓர் ஊருக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.அவர் எருசலேம் செல்லும் நோக்கமாயிருந்ததால் அவர்கள் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.அவருடைய சீடர்கள் யாக்கோபும் யோவானும் இதைக்கண்டு, "ஆண்டவரே, வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா? இது உமக்கு விருப்பமா?" என்று கேட்டார்கள்.அவர் அவர்கள் பக்கம் திரும்பி, அவர்களைக் கடிந்து கொண்டார்.பின்பு அவர்கள் வேறோர் ஊருக்குச் சென்றார்கள்.அவர்கள் வழி நடந்தபோது ஒருவர் அவரை நோக்கி, "நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்" என்றார். இயேசு அவரிடம், "நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மானிடமகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை" என்றார்.இயேசு மற்றொருவரை நோக்கி, "என்னைப் பின்பற்றிவாரும்" என்றார். அவர், "முதலில் நான் போய் என் தந்தையை அடக்கம் செய்துவிட்டுவர அனுமதியும்" என்றார்.இயேசு அவரைப் பார்த்து, "இறந்தோரைப்பற்றிக் கவலை வேண்டாம். அவர்கள் அடக்கம் செய்யப்படுவார்கள். நீர் போய் இறையாட்சியைப் பற்றி அறிவியும்" என்றார்.வேறொருவரும், "ஐயா, உம்மைப் பின்பற்றுவேன் ஆயினும் முதலில் நான் போய் என்வீட்டில் உள்ளவர்களிடம் விடைபெற்று வர அனுமதியும்" என்றார்.இயேசு அவரை நோக்கி, "கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல" என்றார்.

**தியானம் :** இயேசுவைப் பின்பற்ற விரும்பியவர்கள் பலர் இருந்தனர். ஆனால் இயேசு தம்மைப் பின்தொடர விரும்புவோர் சில கோரிக்கைகளை நிறைவேற்றக் கேட்டார். வீடு, நில புலம், குடும்பம், உறவு என்னும் தளைகளால் கட்டுண்டு, இயேசுவைப் பின்செல்லத் தயங்கியவர்கள் பலர் உண்டு. அவர்களைப் பார்த்து இயேசு கூறுவார்: ""மானிட மகனுக்குத் தலைசாய்க்கக் கூட இடம் இல்லை"" (லூக் 9:58). இயற்கையைப் படைத்த இறைவன் உயிரனங்கள் வாழத் தேவையானவற்றை அளிக்கின்றார். நரிகள் குடியிருக்க குழிகள் உள்ளன. பறவைகளுக்கு வீடாகக் கூடுகள் இருக்கின்றன. ஆனால், இயேசுவுக்குக் குடியிருக்க வீடு என்று ஒன்று இருக்கவில்லை. இடம் விட்டு இடம் பெயர்ந்து சென்ற நாடோடி போதகராகவே அவர் இருந்தார். இருந்தாலும். அவ்வப்போது தம் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று அவர் விருந்து உண்டார். அப்போது கடவுளின் ஆட்சி எல்லா மனிதருக்கும் உரியதே என்பதை வெளிக்காட்டும் விதத்தில் அவர் பாவிகளோடும் தாழ்த்தப்பட்டவர்களோடும் கூட பந்தியமர்ந்தார். பிறரை நம்பி வாழ்ந்தவர் இயேசு. அதுபோலவே, இயேசுவைப் பின்செல்ல விரும்புவோரும் தமக்கென்று எதையும் சேர்த்து வைக்காமல் கடவுளை மட்டுமே நம்பி வாழ வேண்டும் என்பது இயேசுவின் போதனை. இயேசுவின் சீடராக வாழ வேண்டும் என்றால் வீடு, குடும்பம், உறவுகள் அனைத்தையுமே துறந்துவிட வேண்டுமா என்று சிலர் கேட்கலாம். கடவுளின் ஆட்சியில் புக விரும்புவோர் அந்த உயரிய பேற்றினைப் பெற்றிட எந்த தியாகமும் செய்ய முன்வர வேண்டும் என்பது தான் இயேசுவின் கோரிக்கை. கடவுளிடத்தில் நம் முழு நம்பிக்கையையும் வைக்க வேண்டும் என்பதே இயேசுவின் வேண்டுகோள். கடவுளுக்கு மேலாக எதையுமே நாம் மதிக்கலாகாது எனவும், எப்போதும் புதிய ஊக்கத்தோடு தம்மைப் பின்பற்ற நாம் முன்வரவேண்டும் எனவும் இயேசு நம்மிடம் கேட்கின்றார்.